**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-600 006.**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| மரு. எம். ஆர்த்தி, இ.ஆ.ப.,<br>மாநிலத் திட்ட இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>சென்னை-06 | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள், |

**ந.க.எண். 1680/ A11/பமேகு/ஒபக/2023-2, நாள். 07.07.2023**

**பொருள்:** பள்ளிக் கல்வி – பள்ளி மாணவர்களின் உடல்நலம் பேணுதல் – தேசிய சுகாதார இயக்கம் – RBSK –அடிப்படை விவரங்கள் திரட்டுதல் – TNSED SCHOOL APP செயலியில் விவரங்கள் பதிவிடக் கோருதல் -சார்பு.

தேசிய சுகாதார இயக்கம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை இணைந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்களுடைய உடல் நலன் சார்ந்த பிரச்சனைகளை இளம் வயதிலேயே கண்டறிதல் மற்றும் தேவையான மருத்துவ பரிசோதனைகள் உள்ளிட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக மாணவர்கள் உடல்நலன் சார்ந்த அடிப்படை விவரங்களை தொகுத்து விரைவு நடவடிக்கையை மேற்கொள்ளும்பொருட்டு (TNSED SCHOOL APP - Health and wellbeing) செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்கள் உடல் நலன் சார்ந்த பிரச்சனைகளை இனம் காணுதல் மூலம் பிறவிக் குறைபாடுகள், வளர்ச்சி குறைபாடுகள், இரத்த சோகை, விட்டமின் குறைபாடுகள் போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்கு விரைந்து உரிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளவும், மருத்துவ பரிசோதனையின் அடிப்படையில் தேவையான நேர்வுகளில் மூக்கு

கண்ணாடி போன்ற தகுந்த உபகரணங்கள் வழங்கவும் உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் இவ்விவரங்கள் அடிப்படையாக அமைகிறது.

இதன்பொருட்டு, வகுப்பு ஆசிரியர்கள், (TNSED SCHOOL APP - Health and wellbeing) செயலியில் தங்களது EMIS அடையாள எண் மற்றும் கடவுச் செல்லைப் பயன்படுத்தி உள்நுழைந்து தங்கள் வகுப்பிற்குரிய மாணவர்கள் உடல்நலன் சார்ந்த அடிப்படை வினாக்களுக்கு உரிய விவரங்கள் பெற்று பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. வகுப்பு ஆசிரியர்கள் பதிவேற்றம் செய்யப்படும் விவரங்கள் அடிப்படையில், சிறப்புக்கவனம்/தொடர்நடவடிக்கை தேவைப்படும் குழந்தைகளுக்கு மிக விரைவாக மருத்துவரின் ஆய்வு/பரிசோதனைகள் திட்டமிடவும் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும் என்பதால் இப்பொருள் சார்ந்து தனிக்கவனத்துடன் செயல்பட்டு மிக விரைவாக அனைத்து மாணவர்களின் உடல்நலன் சார்ந்து சரியான முதல் நிலை விவரங்களை மேற்கண்டுள்ள செயலியில் வகுப்பாசிரியர்கள் மூலம் பதிவேற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தொடர்புடைய அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களின்படி, இப்பணிகளை TNSED School APP, Health and Well-being செயலியின் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

1. emis.tnschools.gov.in-ல் மூலம் தலைமை ஆசிரியர்கள் வகுப்பையும் அதற்கான வகுப்பு ஆசிரியரையும் தேர்வு செய்தல் வேண்டும்.
2. சோதனை செய்யும் வகுப்பு ஆசிரியர்கள் other class screening module யை தேர்வு செய்து இப்பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3. மாணவர்களுடைய பெயர், வகுப்பு மற்றும் பிரிவை ஆசிரியர்கள் தேர்வு செய்தல் வேண்டும்.

4. மாணவர்களிடம் கேள்விகள் கேட்டு அதை சரிபார்த்து செயலியில் உள்ளீடு செய்தல் வேண்டும்.

5. எடை பார்க்கும் கருவி (Weighing Machine ) மற்றும் அளவை நாடா (Inch Tape) ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் எடை மற்றும் உயரத்தை கணக்கிடல் வேண்டும்.

6. பதிவுகள் மேற்கொண்ட பின்பு, திருத்தம் (Edit) செய்ய இயலாது.

7. ஆண் ஆசிரியர்கள் மாணவர்களையும் பெண் ஆசிரியர்கள் மாணவியர்களையும் மட்டுமே சோதனை செய்தல் வேண்டும்.

8. இது சார்ந்த விளக்கப்படம் கீழ்க்காணும் இணைய தள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

How to screen : https://bit.ly/3r38uMQ

Youtube Video : https://bit.ly/3Jnx81a

மேலும், இப்பணியில் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணித்திடவும், இவ்விவரங்களின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதால் விரைவில் இப்பணியினை முடித்திட திட்டமிட்டு செயலாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7.7.23

மாநில திட்ட இயக்குநருக்காக